# ಕರ್ನಾಟಕ ಪ್ರೌಢಶಿಕ್ಷಣ ಪರೀಕ್ಷಾ ಮಂಡಳಿ

ಮಲ್ಲೇಶ್ವರಂ, ಬೆಂಗಳೂರು–560003.

# KARNATAKA SECONDARY EDUCATION EXAMINATION BOARD

Malleshwaram, Bengaluru – 560003.

## 2020-21 ಸಾಲಿನ ಮಾದರಿ ಪ್ರಶ್ನೆ ಪತ್ರಿಕೆ - 2
## 2020-21 MODEL QUESTION PAPER - 2

| | |
|---|---|
| **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು** | **ವಿಷಯ ಸಂಕೇತ : 10-T** |
| **Subject : FIRST LANGUAGE TAMIL** | **Subject Code : 10-T** |
| **ಅವಧಿ : 3 ಗಂಟೆ 15 ನಿಮಿಷ** | **ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100** |
| **Time : 3 hrs. 15 minutes** | **Max. Marks : 100** |

**ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿಗಳಿಗೆ**
**Regular Fresh**

---

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.

2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.

3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.

4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.

5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

**I.** **கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக.** **6 x 1 = 6**

1. பகைநாட்டின் பசுக்களைக் கவர்தல் –
   - A. வாகை
   - B. காஞ்சி
   - C. வெட்சி
   - D. தும்பை

2. தீ..தீ..தீ... என வருவது –
   - A. தொகை நிலைத்தொடர்
   - B. அடுக்குத்தொடர்
   - C. இரட்டுறமொழிதல்.
   - D. தொகா நிலைத்தொடர்

3. இரண்டு சீர்களைக் கொண்டது –
   - A. அளவடி
   - B. குறளடி
   - C. சிந்தடி
   - D. நெடிலடி

4. செய்யுளுக்கே உரியசொல் –
   - A. இடைச்சொல்
   - B. வினைச்சொல்
   - C. பெயர்ச்சொல்
   - D. உரிச்சொல்

5. இரவும் பகலும் என வருவது –
   - A. மோனைத் தொடை
   - B. இயைபுத்தொடை
   - C. முரண் தொடை
   - D. அந்தாதித் தொடை

6. செப்பலோசை உடையது –
   - A. வெண்பா
   - B. கலிப்பா
   - C. வஞ்சிப்பா
   - D. ஆசிரியப்பா

**II.** முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக. **4 x 1 = 4**

7. குழந்தைகள் மெய் தீண்டல் : உடலுக்கு இன்பம் : : குழந்தைகள் மழலைச் சொல் கேட்டல் : .................

8. வயலில் கதிராகி முதிர்வது : நெல் : : மலையில் ஊறி வீழ்வது : ................

9. ஈன்று புறந்தருதல் : தாயின் கடமை : : சான்றோன் ஆக்குதல் : .................

10. கவளம் கண்டதும் கரையும் : காக்கை : : ஓட்ட நறுக்கினும் வாலாட்டுவது : .................

**III.** ஒரு தொடரில் விடை தருக. **7 x 1 = 7**

11. நல் அமுது என்று பாரதிதாசன் எதனைக் குறிக்கிறார் ?

12. எவ்வெவற்றை நீக்கி வாழ்வது அறமாகும்?

13. பாரதியார் கூறும் விந்தை மனிதர் என்ன கருதினர் ?

14. ஈரோடு தமிழன்பன் முரண்படும் பழமொழி யாது ?

15. முன்பெல்லாம் கிராமம் எதன் ஒலியைக்கேட்டு விழித்தெழும் ?

16. நம் கையில் எவை இல்லை என்கிறார் கவிஞர் வைரமுத்து ?

17. அதியமான் நெல்லிக் கனியை யாருக்குக் கொடுத்தார்?

**IV.** மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : **10 x 2 = 20**

18. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன?

19. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை?

20. விடுகதை என்பதை விளக்குக.

21. கிராமத்து மக்கள் கிராமத்தை விட்டுவிட்டு நகரத்திற்குச் செல்வதற்கான காரணம் யாது?

22. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை?

23. பாணன் தான் கொண்டு வந்த பரிசுப் பொருள் யாதென்பதற்குக் கூறிய முதல் மூன்று சொற்கள் யாவை?

24. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை?

25. யாப்பின் உறுப்புகள் யாவை?

26. அணி என்றால் என்ன?

27. தொடை என்றால் என்ன?

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக. 4 x 3 = 12**

28. 'என்னுடைய நாடு' என்ற கவிதையில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களை எழுதுக.

29. காலம் அறிதல் பற்றி வள்ளுவர் விளக்கும் கருத்துகள் யாவை?

30. கடுகு உள்ளத்தைப் பற்றி பாரதிதாசன் எவ்வாறு கூறுகின்றார்?

31. வெண்பாவின் இலக்கணம்யாது?

**VI. குறிப்பு வரைக. 2 x 3 = 6**

32. புறநானூறு

33. பாரதிதாசன்

**VII. கீழ்வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3**

34. அடுக்குத்தொடர் இரட்டைக் கிளவி வேறுபாடுகளை எழுதுக.

அல்லது

வேற்றுமை அணி

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. 3 x 3 = 9**

35. பால்வார்த்தாலும் விஷம் குறைக்காது பாம்பு.

36. அறத்தான் வருவதே இன்பம்.

37. 'பாவம், கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்'.

**IX.** கீழ்வரும் பழமொழியை விளக்குக. **1 x 3 = 3**

38. ‘தவளை தன் வாயில் கெடும்’.

அல்லது

‘ஞாயிற்றைக்கை மறைப்பார் இல்’.

**X.** அடிபிறழாமல் எழுதுக. **1 x 4 = 4**

39. ‘சோதியாய்த் தோன்றும் ........’ எனவரும் பாடல்.

அல்லது

‘பட்டங்கள் ஆள்வதும்....... என வரும் பாடல்.

**XI.** எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக. **2 x 4 = 8**

40. நாம் இயற்கையின் சமநிலையை எவ்வாறு கெடுக்கிறோம் விளக்குக.

41. சேதுப்பிள்ளையின் கலைநயமிக்க உரையாடலை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றினை விவரி.

அல்லது

பிறர்க்கென வாழ்வோரின் பண்புகளை இளம்பெருவழுதி எவ்வாறு விளக்குகிறார் ?

**XII.** கீழ்வரும் செய்யுளின் பொருளை விளக்கி எழுதுக. **1 x 4 = 4**

42. நல்லவர் செய்த செயல்களிலே - பயிர்
நடனமாடுது வயல்களில் அது
நெல்லு கதிராகி முதிரும் நாளிலே
நில முதலாளிகள் கையிலே-போய்
நிறைந்திடும் மார்கழித் தையிலே.

அல்லது

தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை
நனியுண்டு நனியுண்டு காதல்-தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில்.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக.** **2 x 2 = 4**

மிகப்பழைய காலத்தில் பணம் இல்லை. அக்காலத்து மாந்தர் தமக்கு ஒரு பொருள் வேண்டுமானால் தம்மிடம் உள்ள பொருளைப் பிறருக்குக்கொடுத்து அப்பொருளைப் பெற்றனர், எடுத்துக்காட்டாக தயிர் வேண்டுமானால் தம் பால் உள்ள நெல்லையோ கேழ்வரகையோ கொடுத்துத் தயிரைப் பெற்றனர் இதுவே 'பண்டமாற்று' எனப்படும்.

பண்டமாற்றினால் நன்மை விளைந்தாலும் ஒரு வகையில் தீமையும் உண்டாயிற்று அதற்கோர் எடுத்துக்காட்டுக் கூறலாம். ஒருவர் நெய்வேண்டுகிறார் என்று கொள்வோம் நெய்யுடையார்க்கு எல்லாச் செல்வமும் இயல்பிலே அமைந்துகிடைக்கின்றன அவர் எப்பொருளுக்கும் பிறரை எதிர்பார்ப்பதில்லை அத்தகையாரிடம் நெய் எப்படி வாங்கவியலும்? நெய்யுடையார்க்கு வேண்டுவதாகிய பொருள் இருந்தால் அன்றோ அப்பொருளை கொடுத்துவிட்டு நெய் வாங்க இயலும்? இஃது தீமை.

வினாக்கள் :

43. (a) 'பண்டமாற்று' என்றால் என்ன?
    (b) பண்டமாற்றில் உள்ள தீமையாது?

**XIV. மடல் எழுதுக.** **1 x 5 = 5**

44. இலவசப் பேருந்துப் பயண அட்டை வேண்டி அரசுபோக்குவரத்து ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக.

அல்லது

உன் எதிர்கால கல்வித் திட்டம் குறித்து தோழி/நண்பனுக்கு கடிதம் எழுதுக.

**XV. கொடுக்கப் பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.** **1 x 5 = 5**

45. ''சேமிப்பின் நன்மை''.

அல்லது

''கைப்பேசியின் பயன்பாடு''